Date.24.06.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

Os. 126 /2023

வா.சா.2

**பெயர்-** திரு.கிருஷ்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் தொழில் விவசாயம். வழக்கு சொத்தில் வாதிக்கும் எனக்கும் என்ன தொடர்பு என்றால் நான் சொத்தை வாங்கி கொடுத்த இடைத்தரகராக இருந்தேன். வழக்கு சொத்து குறித்து ரியாஸ் என்பவரிடம் உடன்படிக்கை போடப்பட்டிருந்தது. ஆனால் அந்த உடன்படிக்கை 11 வருடத்திற்கு போடப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த உடன்படிக்கை பதிவு செய்யப்படாத ஆவணம் ஆகும். வழக்கு சொத்தின் உரிமையாளர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரியாஸ் என்பவருக்கு தெரியும். எனக்கு ரியாஸை மட்டும் தான் தெரியும். ரியாஸ் மற்றும் ஜாபர் சேட் ஆகியோர் சகோதரர்கள். நான் ரியாஸை தான் சொத்தின் உரிமையாளராக சொல்கிறேன் என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்தை பதிவு செய்யும் போது உரிமையாளர் என்ற முறையில் ரியாஸ் கையொப்பமோ, சாட்சி கையொப்பமோ செய்யவில்லை என்றால் சரிதான். ஜாபர் சாதிக் கையெழுத்து போட்டுள்ளார். நான் கையெழுத்து போட்டேன். விற்கிரய ஆவணம் பதிவு செய்யப்படும்போது தடை மனுவோ அல்லது ஆட்சேபனை மனுவோ எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சொத்தின் உரிமையாளருக்கும் வழக்கின் வாதிக்கும் நேரடி எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சொத்தை வாங்குவதற்கு ரியாஸ் மூலம் வாதி பணம் கொடுத்துள்ளார். பணத்தை ரொக்கமாக கொடுத்தாரா அல்லது காசோலை மூலம் கொடுத்தாரா என்றால் அதை வாதியை தான் கேட்க வேண்டும். சொத்திற்கும் வழக்கின் வாதிக்கும் எந்த

தொடர்பும் இல்லை என்று சொன்னால் ரியாஸ் என்பவர் சொத்திற்கு சம்மந்தப்பட்டவர் ஆவார். சொத்தின் உரிமையாளருக்கும் வழக்கின் வாதிக்கும் பணத்தொடர்பு இருக்குமானால் மேற்படி சொத்தின் உரிமையாளருக்கும் பிரதிவாதிக்கும் தான் உரிமை உண்டே தவிர இடைத்தரகரோ, பதிவு செய்யப்படாத வேறொரு நபர் பெயரிலுள்ள கிரய உடன்படிக்கை ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.